தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோடெக், குளிரூட்டிகள் மற்றும் சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளையும் பழுதுபார்க்க சிறந்த ஸ்தாபனம்

Technico Cool Engineerings

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 87 வியாழன் 03-05-1990 (சித்திரை 20) ஷவ்வால் 07

உங்கள் மங்கல வைபவங்களை வீடியோ படம் பிடித்துக்கொள்ளவும் அழகிய முறையில் கலர்ப் படம் பிடித்துக் கொள்ளவும் நாடுங்கள்

Technico Cool Engineerings

K. K. S. Road Kokuvil

## ஓய்வூதியக்காரர்களுக்கு வாழ்க்கை செலவுபடி 260 ரூ. அடுத்த மாதம் முதல் வழங்கப்படவுள்ளது

ஓய்வூதியக்காரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி 260 ரூபா அடுத்த மாதத்தில் இருந்து வழங்கப்படுமென ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அடுத்த மாதத்தில் இருந்து இதை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதாக ஓய்வூதியப் பணிப்பாளர் வடமாகாண ஓய்வூதியச் சங்கத் தலைவர் திரு, வீ. எஸ். ராமநாதனுக்கு உறுதியளித்துள்ளார். 1988 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் இருந்து இந்த வாழ்க்கை செலவுப்படியை வழங்கும்படி ஓய்வூதிய சங்கம் கோரிக்கை விடுத்து வந்தது தெரிந்ததே. 1988 நவெம்பரில் ஓய்வூதியக்காரர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

# பயிலுநர் ஆசிரியரின் பயிற்சிகாலம்

# மூன்று வருடங்களாகக் குறைப்பு!

## ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறும் ஆசிரியரின் சம்பளத்தை அப்போது பெறுவர்

புதிதாக நியமிக்கப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் காலம் நாலு வருடத்திலிருந்து மூன்று வருடமாக குறைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மூன்று வருடங்களின் பின்னர் இந்த பயிலுநர் ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவே கருதப்படுவார்கள்.

நான்கு வருடங்களின் பின்னரே இவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## சிறிய செய்திகள்

### இம்மாத ஓய்வூதியம்

இம்மாதத்திற்குரிய ஓய்வூதியத்தை 7ம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்செயலக ஓய்வூதிய கணக்காளர் திரு எஸ். சிவபாலன் தெரிவித்தார்.

### புதிய நெடுந்தீவு உ. அ. அதிபர்

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக . திரு எம். தம்பிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார் இவர் உடனடியாக தனது கடமையை பொறுப்பேற்கின்றார்.

இவர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகஸ்தராக இதுவரைகடமையாற்றினார். (03)

### தீவக குடி நீர் பொதுக் கூட்டம்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பான கூட்டம் ஒன்று இன்று காலைவேலணைஉதவி அரசாங்க அதிபர் பணிமனை யில்நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குடிநீர்ப் பிரச்சனை தொடர்பான ஒன்றிணைந்தசெயற்திட்டம்தயாரிக்கப்படவுள்ளது. (03)

### சாவகச்சேரியில் எம்.ஜி. ஆர் சிலை

சாவகச்சேரி உதயசூரியன் சனசமூக நிலையத்தினர் மறைந்த தமிழகமுதல்வர்எம். ஜி ஆரின் நினைவுச்சிலை அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் இந் நினைவுச்சிலை திறப்பு விழா அடுத்த மாதம்நடைபெறுமென சிலை அமைப்புக் குழுப் பிரதிநிதிஇ. சண்முகம் தெரிவித்தார் (ப.3)

### ஜப்பானிய பிரதமர் இன்று கொழும்பில்

ஜப்பானிய பிரதமர் ரொஷிகிகய்பூ இன்றுபிற்பகல் கொழும்பு வருகிறார்முப்பத்திநான்கு வருடத்திற்குப் பின் ஜப்பானியப்பிரதமர் ஒருவர் இலங்கை வருவது குறிப்பிடத்தக்கது.

### களத்தில் கருகிய தளிர்கள்

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்களும் கடந்த இலங்கை இந்திய இராணுவத்தினருடனானமோதல்களில்வீரமரணமடைந்தபோராளிகளுமான ஆனந்தன், பிரசாத், நளின், நிக்ஸன், முரளி, இவான் போன்றவர்களின் குறிப்புகள் அடங்கிய களத்தில் கருகிய தளிர்கள் என்ற நூல் ஒன்று வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

### பொலிஸ் விண்ணப்பம் ஏற்பது நிறுத்தம்

யாழ் பெலிஸ் நிலையத்தில் உபபொலிஸ் சேவை பதவிக்கான புதிய விண்ணப்பங்கள் எதுவும்இனி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்கள் நேற்று வரையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (03)

### வன்னியில் மே தினம் இல்லை

வவுனியா மாவட்டத்தில் இம்முறை தொழிலாளர் தினமான மேதினத்தினை முன்னிட்டு எவ்வித கொண்டாட்டங்களும் இடம் பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா பொலிஸ் நிலையம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கும்

வவுனியா பொலிஸ் நிலையம் பழைய இடத்தில் இயங்கும் என்றும் குற்றவியல், போக்குவரத்து பொலிஸ் பிரிவும்இதேகட்டிடத்தில் செயல்படும் என வவுனியாவில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

பொலிசாரின் விடுதி கண்டி வீதியில் அமைந்துள்ள விமானத் தளத்திற்கு அருகாமையில் இருக்கும். இதற்கென கட்டிடமும் தெரிவுசெய்யப்பட்டு ஒருபகுதி பொலிசார்

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## ஓய்வூதியக்காரரில் தங்கியுள்ள 18 வயதிற்கு மேற்பட்டோர் ரயில்வாரண்ட் பெற புதிய விதி

ஓய்வூதியம் பெறுபவரில் தங்கியிருக்கும் 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஆண், பெண் இருபாலாருக்குமான இலவச புகையிரத ஆணைச்சீட்டு பெறுவதற்கு புதிய கட்டுப்பாடு ஒன்று விதிக்கப்படவுள்ளது.

இவ் ஆணைச் சீட்டு பெறுபவர்கள் தமது பகுதி கிராம சேவை அலுவலகரிடம்இருந்து தாம் பெற்றோரில் தங்கியுள்ளதை உறுதிப்படுத்தும் பத்திரத்தைப் பெற்று வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பத்திரத்தை புகையிரத ஆணைச் சீட்டுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்துடன் இணைத்து வழங்குமாறு யாழ் கிளை அதிகாரிகள் தெரிவித்தனர். (03)

## வெளிநாட்டில் உள்ளோர், வர்த்தகர்களின் உணவு முத்திரைகள் பறிமுதலாகும்

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் மாதவருமானம் அதிகமாக பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உணவு முத்திரைகள் விரைவில் பறிமுதல் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

வெளிநாட்டு வருமானம் பெறும் குடும்பம், வர்த்தகக் குடும்பம் போன்றவைகளுக்கு உணவு முத்திரை தற்போது வழங்கப்பட்டுள்ளது. இவர்களது மாதவருமானம் அதிகமாகவே உள்ளது இப்படியானவர்களது உணவு முத்திரைகளே விரைவில் பறிமுதல் செய்யப்படவுள்ளது.

இதே சமயம் இப்படி உணவு முத்திரைகளை பறிமுதல் செய்து அவற்றை விடுதலைப் புலிகள் பாவித்து வருவதாக மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட வதந்தியை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர் (03)

## மாத்தயா என்ற சொல்

மாத்தயா என்ற பெயர் தமிழ்ப் பெயரே என்று விடுதலைப் புலிகளின் செயற்குழு உறுப்பினர் காசி ஆனந்தன் தெரிவித்தார். புலிகளின் உயர்மட்ட உறுப்பினர்களிடையே இடம் பெற்ற சம்பாஷனை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார், விடுதலைப் புலிகளின் ''பிரதித் தலைவர்'' என்பதையே ''மாற்று ஐயா'' என்று மாத்தயா அழைக்கப்படுவதாக காசி ஆனந்தன்அங்கு தெரிவித்தார் என்று புலிகளின் உயர்மட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கட்டணம் செலுத்தாத

# 342 தொலைபேசி இணைப்புக்கள் கிழக்கில் திடீர்த் துண்டிப்பு

கிழக்கிற்கட்டணம் செலுத்தத் தவறிய 342 பேரின் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது·

மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் தொலைபேசி கட்டணம் செலுத்த தவறிய 342 பேரின் தொலைபேசி தொடர்புகளேஇவ்வாறு துண்டிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் 157 லைன்களும் கல்முனையில் 185 லைன்களுமே இப்படித் துண்டிக்கப்பட்டுள்ளன.

கல்முனைப் பகுதியில் தொலைபேசிக் கட்டண நிலுவையாக 21 இலச்சத்து 27 ஆயிரம் ரூபாவும் மட்டக்களப்பில் 10 லட்சம் ரூபாவும் பாவனையாளர்களால்திணைகளத்திற்குச் செலுத்தப் படவேண்டும்.

துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்புகளை மீண்டும் பெறவிரும்புவோர் இரண்டரை மாத காலத்திற்குள் நிலுவைக்கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

அக்கால அவகாச காலத்திலும் பிந்திச் செலுத்துவோருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

## சீனா வாபஸ்

திபெத்தியத் தலைநகர் லாஷாவில் 14 மாதகால இராணுவச் சட்டம் அகற்றப்பட்டதையடுத்து அங்குள்ள புனிதப்பகுதியிலிருந்து சீனத் துருப்புக்கள் வாபஸ் பெறத் தொடங்கியுள்ளன.

## மோசடி வர்த்தகர்கள் கைது

பண்டிகைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது கூடியவிலையில் பொருட்களை விற்பனை செய்தமைக்காகவும், பொருட்களின் விலைப்பட்டியலை காட்சிக்கு வைக்காத மோசடிக் குற்றத்திற்காகவும் 350 வர்த்தகர்களை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாவட்டங்களில் கைதான இவ் வர்த்தகர்கள் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

## 'முரசொலி'அனுசரணையுடன் வவுனியாவில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி

வவுனியா—புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் பன்னிரெண்டாவது வருடாந்த விளையாட்டு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் 19ம்திகதி கழக விளையாட்டு மைதானத்தில் புதுக்குளம் பிரிவு சிற்றூர வையின்ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக 'முரசொலி' அனுசரணையுடன் ஆண்களுக்குரிய 115 மைல் மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி நடைபெறும். இப் போட்டி புதுக்குளம் கழக மைதானத்திலிருந்து ஆரம்பமாகி கண்டி வீதி வழியே பரந்தனை அடைந்து மீண்டும் அதே வழியே ஆரம்ப இடத்தைச் சென்றடையும்.வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தோர் எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இந்தச் சைக்கிள்ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் மட்டும்தமது விண்ணப்பங்களை பூர்த்திசெய்து 17.05.90 க்கு முன்னர் கிடைக்க கூடியதாக கழகச் செயலாளர்,சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் புதுக்குளம் சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இந்தச்சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 'சாலி' மோட்டோர் சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்படும் இரண்டாம் பரிசாக தொலைக்காட்சிப்பெட்டியும் மூன்றாம் பரிசாக சைக்கிள் ஒன்றும் வழங்கப்படும் அத்துடன் அடுத்து வருவோருக்கு மேலும் எட்டு விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

முரசொலி அனுசரணையுடன்
வவுனியா -- புதுக்குளம்
சித்தி விநாயகர் விளையாடடுககழகம்நடாத்தும்

### 12-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி

### 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிக்குரிய விண்ணப்பம்

முழுப்பெயர்..............................................

விலாசம்..............................................

மாவட்டம்..............................................

அதிர்ஷ்ட இலக்கம் ..............................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு கழகம் பொறுப்பாளி அல்ல என்பதினை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

## புதிய முத்திரை வழங்கப்படுகிறது

(மூளாய்)

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல கிராம சேவகர் பிரிவிலும் இவ்வாரம் புதிய உணவு முத்திரை விநியோகம் நடைபெற்று வருகிறது. (ப-1)


## சிறு விளம்பரம்

### கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் 5.5.90 (சனி) தொடக்கம் முழு நேர வகுப்புகளாக நடைபெறும் S ஜெயராஜா, இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர். 05003

### தேவை

யாழ்ப்பாணம் உயர்குல சைவ வேளாள 31 வயது ஜீ. சி. ஈ. (உயர் தரம்) சித்தியெய்தி பிரான்சில குடியுரிமையுடன் கம்பனி முகாமையாளனாகப் பதவி வகிப்பவருக்கு உயர் குடியில பிறந்த அழகு, கலவி, சீதனமுள்ள பெண் விவாகம் முடித்துப் பிரான்சுற்குப் போகச் சம்மதமுள்ளவர்களிடமிருந்து உடன் விண்ணப்பம் கோரப்படுகிறது. விளம்பர இல 291 மே / பா முரசொலி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் 05019

### A/L PHYSICS

ஆசிரியர்
R. சதுயசீலன்
B M C முன் லேன்
யாழ்ப்பாணம்.
A/L 90
(MON TO FRI)
8-30 A. M.
திண்மத்தின் விரிவு
9-30 A. M.
அழுத்தமானி
4-30 P. M.
கோளவாடிகள்
ஆரம்பம்
02-05-1990
புதன் காலை
8-30 மணி
05013


தீவுப்பகுதியில்

## குடிநீர்ப் பிரச்சினை பூதாகாரமாகி விட்டது

தீவுப்பகுதியில் வாழும்மக்கள் குடிதண்ணீர்ப்பிரச்சினையால் பெரும் துயரினை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் சமூக சேவைப் பகுதியினரால் தீவுப்பகுதிமக்களுக்கு இலவசமாகக் குடிதண்ணீர் வேலணை சாட்டி பகுதியிலிருந்து பவுசர்கள் மூலமாக கொண்டு வந்து இங்குள்ள தண்ணீர்த் தொட்டிகளின் மூலமாக நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

ஆனால் கடந்த காலங்களில் சமூக சேவைப் பகுதியினர் இலவச குடிநீர் விநியோகத்தைத் திடீர் என நிறுத்தி விட்டார்கள்.

அதன் பிறகு வேலணை பிரதேசசபைகளுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மூலமாக வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மூலமாகக் குடிநீர்விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அந்தத் தண்ணீருக்கு மக்கள் பணம் செலுத்தி தண்ணீரைப்பெற வேண்டிய இக்கட்டான நிலைஏற்பட்டிருக்கிறது'

தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீருக்குப் பணம் அறவிடாது இலவசமாக விநியோகிக்குமாறு மக்கள்கோருகின்றனர்.

## முல்லைத்தீவில் ஊர்வலம் கூட்டம், பரிசளிப்புவிழா

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவையொட்டியும், இந்தியப்படை வெளியேற்றத்தை ஒட்டியும் மாபெரும் எழுச்சி விழா முல்லைத்தீவில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும், பரிசளிப்வ்விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

இங்கு நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகரான முல்லை மாவட்டப் பொறுப்பாளர் திரு. திவாகர், முல்லை, மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கைலாஸ் பிரதேசப் பொறுப்பாளர் திரு. மனோ உட்படபலரும் உரையாற்றினர்.

## நாம் விளையாட்டுக்களில் சளைத்தவர்கள் அல்ல

விளையாட்டானது மனிதனை முழுமனிதனாக்குகின்றது. உளபூர்வமான வளர்ச்சிக்கு விளையாட்டுப் பயிற்சியானது புத்துணர்வினை ஏற்படுத்துகின்றது,

இவ்வாறு வவுனியா மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. என். தினேஸ் கோவில் புதுக்குளம் றொக்கற் விளையாட்டுக்கழகத்தின் பதினாறாவது விளையாட்டு விழாவின் பரிசளிப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி கழகத்தின் தலைவர் திரு. கே. ஆர். சந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் இவர் மேலும் பேசுகையில்:

புயலுக்குப்பின் அமைதி என்றவாறு இப்போதுஅமைதி ஏற்பட்டுள்ளது. இந்த வேளையில் நாம் சகல துறைகளையும் வளர்த்து எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எமது தேசத்தில் நிம்மதியான சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

நாம் விளையாட்டுக்களில் குறைந்தவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டியவர் எம் மத்தியில் உள்ளனர்.

விளையாட்டு மூலம் பல தரப்பட்ட சமுகத்தினைச் சேர்ந்த வர்க்க வேறுபாடுகள் நீக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

இந்தவைபவத்தில் கோவில் குளப் பகுதி விடுதலைப்புலிகள் மக்கள் பொறுப்பாளர் திரு. இராமு, வவுனியா, அரச அதிபர் திரு. செ.பத்மநாதன் கிராமோதய சபைத் தலைவர் திரு. சி. வையாபுரிநாதன், சமாதான நீதிபதி திரு. கே. நடேசபிள்ளை ஆகியோரும் பேசினார்கள்.

கழக செயலாளர் திரு. ராஜன் நன்றி உரை தெரிவித்தார்.

## ஈச்சங்குளத்தில் சுகாதார நிலையம்

மிகவும் பின் தங்கிய கிராமமான ஈச்சங்குளக் கிராமத்தில் மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா செலவில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தின் மூலம் போக்குவரத்துவசதிகளும் அடிப்படை வைத்தியச் சுகாதார வசதிகளுமற்ற ஈச்சங்குளக் கிராமம் உட்படச் சுற்றுப் பகுதிக் கிராமவாசிகளும் நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கொள்ளை

இராணுவத்தினர்போல் வேடமிட்டு வீட்டிற்குள் புகுந்த கொள்ளைக்கோஷ்டியினர் வீட்டாரை துப்பாக்கி முனையில் பயங்காட்டி இரண்டு இலட்சம் பெறுமதியான நகைகளையும், பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் ஒன்று மட்டக்குளியில் இடம்பெற்றது,


## தவறிவிட்டது

நல்லதம்பி தபோதினி என்பவருடைய கைப்பை நேற்று 1.5.90 சாவகச்சேரி—மானிப்பாய் (C.T.B.) பஸ்சில் தவறவிடப்பட்டுள்ளது. இதில் உணவு முத்திரை, அடையாள அட்டை போன்றன அடங்கும். இக் கைப்பையைக் கண்டெடுப்பவர்கள் முரசொலிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

05016

# இதயநாதம்

**வியாழக்கிழமை 03-05-1990**

### நல்வாக்கு

விடுதலை இல்லாத போது வாழ்வு சாரமற்று விடுகின்றது; சப்பிட்டுப் போகின்றது; பொருளற்றுப் போகின்றது.

-எடிசன்

**ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்**

## வடபகுதி ரயில்சேவை

போக்குவரத்துத் துறையில் அதிகளவு இலாபத்தை ஈட்டிக் கொடுப்பது ரயில் சேவையே.

ரயில் சேவையில் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொடுப்பது வடபகுதிக்கான கொழும்பு ரயில்சேவையாகும்.

இருந்தும் இன்றுள்ள ரயில்சேவைகளில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதும், வடபகுதிக்கான ரயில் சேவையே.

தெற்கில் சேவைபுரியும் சகல தமிழ் ஊழியர்களும் வடபகுதி ரயில் சேவையையே நம்பியுள்ளனர்.

பொருளாதார ரீதியாக அவர்களது வடபகுதி வருகைக்குக் கைகொடுப்பது ரயில் சேவையே.

தனியார் பஸ் சேவையின் கட்டண உயர்வு அவர்களைப் பாதித்த வேளையில் அவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகத் திகழ்வது இது.

மேலும் ஆயிரக்கணக்கான வடபகுதி அரச ஊழியர், ஒய்வூதியக்காரர்கள் இன்று தென்பகுதிப் பயணத்திற்கு நம்பியிருப்பது ரயில் வாரண்டுகளையே.

முன்னர் வடபகுதிக்குப் பல ரயில் சேவைகள் நடைபெற்றன.

நிலைமை சீராயிருந்த போது கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை உத்தரதேவி, யாழ்.தேவி, இன்டர் சிற்றி, தபால் ரயில், விசேட ரயில் சேவை என ஐந்து சேவைகள் நடைபெற்றன.

இவை தினசரி இடம்பெற்ற ரயில் சேவைகளாகும்,

ஆனால், இன்று இரண்டு சேவைகள் மட்டுமே நடைபெறுகின்றன.

இதனால் வடபகுதி ரயில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

முக்கியமாகப் பெண்கள் அடையும்கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

தனியார் பஸ்சேவையைப் பெண்கள் அதிகம் விரும்புவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் மிகவும் நெருக்கடியானரயில் சேவையிற் பெண்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ளுவதும் மிகவும் அவலமானது.

இரண்டு ரயில் சேவைகள் மட்டுமே நடைபெறுவதால் பயணிகள் நெருக்கடி அதிகரித்துள்ளது.

மேலும் தற்போது வடக்குத் தெற்கில் நிலைமை சீரடைந்துள்ளதால் பயணம் செய்வோர் தொகை மேலும் மேலும் அதிகரிக்கிறது.

பயணிகளில் 70 வீதத்தினர் நின்றபடியே தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நீண்ட தூரம் கால் கடுக்க நிற்கும், வயோதிபர்,பெண்களின் நிலை பரிதாபகரமானது.

இதேசமயம் பலர் இடநெருக்கடியால் கதவு ஓரங்களில் தூங்கியபடி பயணம் செய்கின்றனர்.

இதனால் அண்மையில் ஒருவர் மரணமடைந்ததும் குறிப்பிடத் தக்கது.

முன்னர்போல் மேலதிக ரயில் சேவையை நடத்துவதற்குப் போதிய ரயில் எஞ்சின்கள் இல்லை என்ற காரணம் கூறப்படுகின்றது.

இதேசமயம் மற்றைய பகுதிகளுக்கான ரயில் சேவைகள் ஒழுங்காக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

வடபகுதி ரயில் சேவையை மட்டும் அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடத்துவது தவிர்க்கப்படவேண்டும்.

இன்று ரயில போக்குவரத்துச் சேவைக்கு அதிக இலாபத்தை ஈட்டித்தரும் வடபகுதி ரயில் சேவைக்கு அரசு உடனடியாக அதிக எஞ்சின்களை ஒதுக்கிச் சேவைகளை முன்போல அதிகரிக்க வேண்டுமென்பதே பயணிகளின் விருப்பமாகும்.

---

### 1990 எழுத்தறிவு ஆண்டாகப் பிரகடனம்

# வாழ்க்கை மரணம்: இடையிலான வேறுபாடு போன்றதே எழுத்தறிவு

''பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாது சிறுவயதிலேயே அவர்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.இதற்கானசட்டமூலம் ஒன்றும் விரைவில் கொண்டுவரப்படும்' என்றுகூறியுள்ளார். புதிய கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

இலங்கையில் எழுத்தறிவு அதாவது கல்வியறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை 90சதவீதம் இவ்வெண்ணிக்கை வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்படலாம் எனவும் அமைச்சர் லலித் எச்சரித்துள்ளார். இலங்கையின் தொன்னூறு சதவீத எழுத்தறிவை நூறு சதவீதமாக்குவேன் எனவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார் இது பாராட்டப்பட வேண்டியதே தென்கிழக்காசியாவில் எழுத்தறிவு அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கிறது. இதே சமயம் ஆசியாவின் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையே இலங்கை எழுத்தறிவில் கூடிய சதவீதமுடைய முதல் நாடாக விளங்குகிறது.

இலங்கையில் இவ்வாறு கல்வியறிவு கூடிய வீதத்தில் காணப்படுவதற்கு இலவசக் கல்விமுறை, பாடசாலைகளின் எண்ணிக்கை, கல்விக்கான அரசின் நிதி ஒதுக்கீடு ஆகியவைகள் முக்கிய காரணிகளாக இருந்த போதிலும் இந்நாட்டுமக்களின் மனநிலையும் ஒரு காரணமாக இருக்கலாம் என கல்வியலாளர்கள் கூறுகின்றனர். ஏனைய நாடுகளைப் போல் அல்லாது எமது சமூக அமைப்பு முறையும் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. கற்றவனையே சமூகம் விரும்புகிறது. முன்நிறுத்துகிறது கல்வியையும் ஒருவன் செய்யும் தொழிலையும் ஒப்பிட்டுப் பார்த்து அவன் தரத்தை கணிப்பிடுகிறது. இத்தகைய பலகாரணிகளினால் ஒரு நபர் கல்வி கற்க வேண்டும் என்ற தேவை இலங்கையில் இருக்கிறது.

1990 ஆம் ஆண்டை உலக எழுத்தறிவு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது யுனேஸ்கோ. எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உலக மக்களுக்கு உணர்த்துவதற்கே இப்பிரகடனம் செய்யப்பட்டது.

ஒரு நாட்டில் ஏற்படும் அபிவிருத்தியில் எழுத்தறிவும் ஓர் அங்கமாக இருக்கலாம். எழுத்தறிவு என்பது அந்நாட்டின் கல்விப் போதனையிலேயே தங்கியிருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை 1970 காலப்பகுதிவரை கல்வித்துறையிற் பெருமளவு மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. அந்நியர் ஆட்சிக்காலத்தில் கல்வி ஓர் முக்கிய காரணியாக இருக்கவில்லை. உள்நாட்டில் எழுத்தறிவு அதிகரிப்பால் மக்கள் தமக்கு எதிராகத்திரும்ப இது காரணமாக அமைந்து விடலாம் என அந்நிய ஆட்சியாளர்கள் கருதியமையும் இதற்கு ஓர் காரணமாக அமைகிறது. கடந்த காலங்களிற்கூட எமது பகுதிகளில் பொருளாதார இலக்குகள் மட்டுமன்றி கல்வியுடன் தொடர்பான இலக்குகள் மீதும் குறிவைத்துத் தாக்கப்பட்ட சம்பவங்கள் இதற்கு ஓர் உதாரணமாக அமைகிறது.

இலங்கையில் எழுத்தறிவு அதிகரித்துக் கொண்டு வருகின்றபோதிலும் கல்வித்துறையில் பிராந்தியங்களிடையே கல்விப்போதனையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது இன்றுவரை தீர்க்கப்படாமல் இருப்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

பிராந்திய ரீதியாகப் பார்க்கும்போது கொழும்புச் சூழலைச் சேர்ந்த 10 வீதமான சிறுவர்களும் வடக்கில் 8 வீதமான சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்வதில்லை எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அத்துடன் க. பொ. த. சாதாரண பரீட்சையில் கொழும்பிலிருந்து 27 வீதமானவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து 32 வீதமானவர்களும் தோற்றுகின்றனர். இதே போன்று உயர்தரப் பரீட்சையிலும் தோற்றும் மாணவர்களின் தொகை வேறுபடுகிறது. இதேவேளை கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மன்னார், அம்பாறை ஆகிய பகுதிகளில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் தொகை இதைவிட குறைவாக இருக்கிறது. இது மட்டுமன்றி ஓர் மாகாணத்திற்குள்ளேயும் கல்வியறிவில் சமமின்மை காணப்படலாம்

இப்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள இலவசக் கல்வித்திட்டமும் நாட்டில் கல்வி வளர்ச்சிக்கு முக்கிய மைற்கல்லாக அமைகிறது. இவற்றுடன் தற்

**து. துஷ்யந்தன்**

போதைய அரசினால் கொண்டுவரப்பட்ட பாடசாலை மதிய உணவு முறைகளும் கல்வித்துறையில் கணிசமான அளவு மாற்றத்தை எதிர்காலத்தில் காட்டலாம் எனவும் எதிர்பார்க்க முடிகிறது. எழுத்தறிவு ஓர் குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கு மட்டும்தான் என்றநிலை மாறி இலங்கையில் எல்லா மட்டத்தைச்சேர்ந்தவர்களும் இதைப் பெற்றுக்கொள்ளும் இப்புதிய திட்டங்கள் இலங்கையைப் பொறுத்தவரையில் எழுத்தறிவின்மையை விரட்ட உதவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் எண்ணூற்றிஎண்பத்தொன்பது மில்லியன் தொகையினர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கின்றனர். எழுத்தறிவு அற்ற பாடசாலைச் சிறுவர்கள் பத்துலட்சம்பேர். இதன் விளைவு இருபத்தொராம் நூற்றாண்டிலேயே எம்மை உதைக்கும். எனவே இப்போது இருந்தே துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் எமக்கிருக்கிறது.

உலகத்தைப் பொறுத்தவரையில் எழுத்தறிவு அற்றவர்களின் தொகை அதிகமாக உள்ளது ஆபிரிக்க நாடுகளில்தான். இங்கு ஐம்பத்திநாலு சதவீதத்தினர் எழுத்தறிவு அற்றவர்கள், அதாவது சனத்தொகையில் சுமார் அரைப்பங்கினர் இதற்கு அடுத்ததாக ஆசியாவும் (36%) லத்தீன் அமெரிக்காவும்(17%) எழுத்தறிவு அற்றவர் தொகையைக் கொண்டுள்ளன.

சில வருடங்களுக்கு முன்னர் எத்தியோப்பியாவில் ஓர் இளம் தாய் தன் குழந்தையின் மரணத்துக்கு அவளது எழுத்தறிவு இன்மையே காரணமாகி விட்டது. வைத்தியர்களாற் கொடுக்கப்பட்ட மருந்துகளின் அளவு முறையை அவளால் வாசிக்க முடியவில்லை.

அமெரிக்காவில் ஓர் தொழிலாளியின் எழுத்தறிவுஇன்மையால் ஒரு பசு கொல்லப்பட்டது. பசுவுக்கு வாங்க வேண்டிய ஊசி மருந்துக்குப் பதில் உரக்கலவையை மாட்டுக்கு ஏற்றிவிட்டார் இரண்டினதும் வேறுபாட்டை வாசித்தறிய இயலாமல் இருந்தமையே இதற்குக் காரணம். இந்தியாவில் ஓர் விவசாயி தாம் என்ன பத்திரத்திற் கைஅடையாளம் இடுகிறோம் எனத்தெரியாது தனதுவயலை இன்னொருவனுக்கு எழுதிக் கொடுத்தான்.

எழுத்தறிவு என்பது உண்மையில் வாழ்தலுக்கும் மரணத்துக்குக்கும் இடையிலான வேறுபாட்டைப்போன்றது.

சிலர் இதைவிட எத்தனை பிரச்சனைகள் தீர்ப்பதற்கு எம்மிடையே இருக்கிறது. இது பெரும் பிரச்சனையில்லையே என முணுமுணுக்கலாம். இது தவறு. வேகமாக முன்னேறி வரும் உலகில் தக்கனவே பிழைத்துக்கொள்ள முடியும். எழுத்தறிவு இன்றி இக்காலத்திற் பிழைத்துக்கொள்ள முடியாது. வறுமை, போஷாக்கின்மை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய தடைகளைத் தாண்ட எழுத்தறிவு ஓர் ஊன்றுகோலாக இருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது, எமது அன்றாட அலுவல்களில் எத்தனைமுறை எமது எழுத்தறிவு பயன்படுகிறது என ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். எழுத்தறிவின் தேவை இதிலிருந்து புலனாகும்.

இந்நிலையில் இலங்கையில் எழுத்தறிவு வீதம் உயர்வாக இருப்பதையிட்டுப் பெருமைப்படும் அதேசமயம் இவ்வீதம் குறையாமற்பாதுகாக்கப்படப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

1990 எழுத்தறிவு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்திற் கல்வி அமைச்சர் எடுக்கும் புதிய நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்புமாகும்.

---

## காங்கேசன ரயில நிலையத்தில அனாதரவாக இருவாகனங்கள்

(காங்கேசன்துறை)

கடந்த திங்கட்கிழமை, காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகே இரவு மெயில் ரயில் சென்ற பிறகு, 8 சிறீ 10 இலக்கமுடைய நீல நிற ஒக்ஸ்போட்காரும், இலக்கம் எதுவுமே இல்லாத நிலையில் நீல நிற C 20 மோட்டார் சைக்கிள் ஒன்றும் மர்மமான முறையில் அனாதரவாக விடப்பட்ட நிலையில் காணப்பட்டன.இவ் வாகனங்களுக்குரிய சாவிகளும் அவற்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டன.

பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து சிறிது நேர பதட்டத்தின் பின்பு இரவு 10 மணியளவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அவ் இரு வாகனங்களையும் எடுத்துச் சென்றார்கள்.

(ப- 10)

## ஆய்வுகூட நுணுக்காய்வாளர் வினைத்திறமை காண் பரீட்சை

ஆய்வுகூட நுணுக்காய்வாளர்கள் தரம் III, II வகுப்புக்களில் சித்தியடைந்தவர்களை தரம் I க்கு உயர்த்துவதற்கான திணைக்கள வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 1990 மே மாதம் நடைபெறவுள்ளதாகச் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது காலவரையிலும் சிங்களம். ஆங்கிலம் ஆகியஇரண்டு மொழிகளிலும் மாத்திரமே இப்பரீட்சை நடைபெற்றது இம்முறை மூன்று மொழிகளிலும் இது நடைபெறவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(47,

# செய்தி மஞ்சரி

## ஊழியர் குடும்பத்திற்கு நஷ்டஈடு

வருமானம் தரக்கூடிய முதலீட்டில் பயன்படுத்தி அதன் மூலம் முழுக்குடும்பமும் பயன் பெறும் வகையில் வன்செயலின் போது மரணமான இ.போ.ச ஊழியர்களின் 10 குடும்பங்களுக்கு 12 இலட்ச ரூபா நஷ்ட ஈடாகத் திருமலை டிப்போவில் வைத்து வழங்கப் பட்டது.

பயங்கரவாத நடவடிக்கையின் போது மரணமான ஏனைய ஊழியர்களின் குடும்பங்களுக்கு இதே வகையில் விரைவில் நஷ்ட ஈடு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மே,யூன் ஒய்வூதியங்கள்

இவ்வருட மே,யூன் மாத ஒய்வூதியங்கள் முன் கூட்டியே வழங்கப் படவுள்ளன.

மே, மாதம் 7 ஆம் திகதியும்,யூன் மாதம் 5 ஆம் திகதியும் ஒய்வூதியம் வழங்கப் படவுள்ளது.

மே,மாதம் 15 ஆம் திகதியும், யூன்மாதம் 5-ம்திகதியும் ஒய்வூதியம் வழங்குவதற்கு முன்னர் நிர்ணயிக்கப் பட்டிருந்தது.

## பரிசாரகர் பரீட்சை

யாழ் போதனா வைத்திய சாலையில் இடம் பெற்ற பரிசாரகர் பயிற்சிக்கான பரீட்சை இம் மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளது,

கடந்த மார்ச் முவலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப் பயிற்சி நெறி இம் மாதம் 30 ம் திகதியுடன் முடிவுற்றது. எனினும் இப் பயிற்சிக்கான பரீட்சை நடை பெறாது இம் மாதம் 27 ம் திகதி வரை பின் போடப்பட்டிருந்தது.

## கிராமிய வீடமைப்புக் கடன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிராமிய வீடமைப்புக் கடன் பெறுவோர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலுள்ள சபை அலுவலர்களிடம் விண்ணப்பப் படிவம் பெற்று மே 15ஆம் திகதிக்கு முன்னர் பதிபு செய்தல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கடனைப் பெறுவதற்கு தனிப்பட்ட அல்லது அமைப்புகளின் சிபார்சு தேவையில்லை எனவும் பட்டியலில் பதிவு செய்யப்படும் அடிப்படையிலே கடன் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தினப்பதிவேடு இங்கு இல்லை

(மூளாய்)

யாழ் மாவட்டத்திலுள்ள பல அரச அலுவலகங்களுக்கு 1990 ம் ஆண்டிற்குரிய பொது தினப்பதிவேடு, நினைவூட்டற் தினப்பதிவேடு என்பன இதுவரை வழங்கப்படவில்லை இதனால் திணைக்களங்களில் கடமையற்றும் ஊழியர்கள் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குகிறார்கள். இவை கொழும்பிலிருந்தே எடுத்துவரப்பட்டு வருட ஆரம்பத்தில் ஊழியர்களுக்கு வழங்கப்சடுவது வழக்கம். (ப-1)

## லங்கா -அரபு நட்புறவுச் சங்கம்

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை இலங்கையிலிருந்து அகற்றியமைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் முகமாகவும் சகல அரபு நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தும் நோக்கோடும் விரைவில் சிறீலங்கா-அரபு நாடு நட்புறவுச் சங்கம் ஒன்று அங்குரார்ப் பணம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் அரசியல் கட்சிகள் பலவற்றின் உறுப்பினர்கள், அரபு நாடுகள் பலவற்றுடன் நட்புறவும் நேரடித் தொடர்பு உள்ளவர்கள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## சரணடைய மீண்டும் சர்ந்தர்ப்பம்

தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புள்ளசகல இளைஞர்களும் தீவிர வாதத்தைக் கைவிட்டுச் சரண் அடையுமாறு சுதந்திரச் சரண் குழு' மீண்டும் வேண்டு கோள்விடுத்துள்ளது.

சரணடையும் இளைஞர்களின் வசதி கருதி நாடெங்கும் 21 மாவட்டச் சரண் குழக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

தேசிய வாழ்வில் இணைந்து கொள்வதற்குச் சகல உதவிகளையும் அளிப்பதோடு விடுதலை செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் வழங்கவும் இக்குழு உறுதியளித்துள்ளது.

## ஆசிரிய இடமாற்றம் பற்றி ஆய்வு

ஆசிரியர்களின் புதிய இட மாற்றத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கு முன்னோடியாக நாடு தழுவிய ஆய்வு ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கையினை கல்விச் சேவை ஆணைக் குழு மேற் கொள்ளவுள்ளது.

இதற்கமைய எல்லா ஆசிரியர் இட மாற்றங்களும் இம் மாதத்துடன் நிறுத்தப்படுவதோடு, பிந்திய இடமாற்றத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரின் கவனத்திற்கு சமர்பிக்கப்படவுள்ளது.

## யானைகள் அட்டகாசம்

விசுவமடு தொட்டியடிப்பகுதியில் பிரமந்தல் ஆறு,புன்னை நீராடி ஆகிய குடியேற்றப் பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் பெருமளவு அதிகரித்துள்ளது.

இரவு நேரங்களில் குடியிருப்புகளில் புகுந்து வாழை மரங்களையும் தென்னை மரங்களையும் நாளாந்தம் இவைஅழித்து வருவதாக மக்கள் புகார் செய்துள்ளனர்.

### தோட்டத் தொழிலாளருக்கும்

# பங்குரிமை வழங்கவேண்டும் மே தின விழாவில் தொண்டமான்

''அரசு சார்பு நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குப் பங்கு வழங்குவதுபோலத், தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்டங்களிற் பங்கு வழங்கி அவர்களையும் தோட்டங்களின் பங்குதாரர்களாக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

தலவாக்கொல்லயில் நடைபெற்ற இ. தொ. காவின் மே தின விழாவிற் பேசுகையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

''அரசாங்கத்துடன் இணைந்து இ. தொ. கா தொடர்ந்து செயற்பட வேண்டுமானால் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களின் பங்குதாரர்களாக மாறவேண்டும்'' என்று அவர் வலியுறுத்தினார்.

''தோட்டத் தொழிலாளர்கள் தினச்சம்பளம் வாங்கும் தொழிலாளர்களாக இருந்ததுபோதும். தோட்டங்களில் அவர்கள் பங்குதாரர்களாக வேண்டும்'' என்றார் அவர்.

பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன உட்பட மற்றும் பல பிரமுகர்களும் இவ்விழாவிற் கலந்து கொண்டனர்.

## இந்திய வம்சா வளியினரை இந்தியாவிற்கு அனுப்பமுடிவு

இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜா உரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்ப அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

சுமார் ஒரு லட்சம் இந்திய வம்சா வளியினரை இந்தியாவுக்கு அனுப்ப ஆயத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளர்.

இந்தியா செல்ல மறுக்கும் தொழிலாளர்களுக்கு இங்கு வேலைகள் வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் மூலமே இலங்கைப் பிரஜா உரிமை பெற்றவர்களுக்கு வேலைவாய்பை பெற்றுக் கொடுப்பது சுலபமாக இருக்கும் எனவும் அமைச்கர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியா செல்வதற்கு இலவச விமான ரிக்கற்றுகள் தரப்படலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்,

## குப்பி விளக்குடன் ஒரு ரயில் நிலையம்

மின்சார வெளிச்சமின்றி குப்பிவிளக்கு வெளிச்சத்தில் பிரயாணிகள் இரவுப்புகையிரத்தில் ஏறுவதும்அதிகாலை தபால புகையிரத்தியிருந்து இறங்குவதுமான நடைமுறை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திற்கு அடுத்ததாக இருக்கும் புங்கன்குளம் புகையிரத நிலையத்தில் நடைபெறுகிறது.

கொழும்புத்துறை, சுண்டிக்குளி, அரியாலை, நல்லூர், பாஷையூர், ஈச்சமோட்டைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த புகையிரத நிலையத்திலிருந்தே புகையிரதப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையத்திற்கு நிரந்தரமாக மின்சார இணைப்பைக் கூடிய விரைவில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இப்பகுதியைச் சேர்ந்த சன சமூக நிலையங்களும், பொது ஸ்தாபனங்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (27)

### இந்திய இராணுவத்தின்

## தொலைபேசி வயர்கள் கவனிப்பாரற்ற நிலையில்

ரெலிபோன் வசதிக்காகக இந்திய இராணுவம் யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து பிரதான வீதி வழியாக இணைத்த ரெலிபோன் தொடர்பு வயர்கள் ஆங்காங்கே அறுந்து வீதியில் விழுந்துகிடக்கின்றன.

கச்சேரிக்குச் சமீபத்திலிருக்கும் பழைய பூங்கா வீதிச் சந்தியில் இந்த ரெலிபோன் இணைப்பு வயர் கீழே விழுந்து சந்தியை மறைத்துக்கொண்டிருப்பதால் அந்த வீதிவழியாகப் பிரயாணதைதை மேற்கொள்பவர்கள் சந்தியைக் கடக்கும்பொழுது மிகவும் அவதானமாகக் மேற்கொள்கிறார்கள்.

அறுந்து வீதியில் விழுந்து கிடக்கும் இந்த வயர்களின் உரிமையாளர்கள் யார்? யார் இதனை அப்புறப்படுத்துவார்கள்? என்ற கேள்வியைப் பலரும் கேட்டுக்கொள்கிறார்கள். (27)

### மல சல கூடம் அமைப்பதற்கு

## சுகாதார பகுதி வழங்கும் மானியம் அதிகரிக்க கோரிக்கை

புதிதாக மல சல கூடம் அமைப்பவர்களுக்கு மானியமாக சுகாதார திணைக்களத்தினால் தற்போது வழங்கப்பட்டு வரும் 700 ரூபா அதிகரிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாத வருமானம் ஆயிரம் ரூபா உள்ளவர்களுக்கே சுகாதார பரிசோதகரின் சிபார்சின் பேரில் இந்த 700 ரூபா மானியம் வழங்கப்படுகின்றது.

இப்பொழுது சீமேந்தின் விலை கட்டிடபொருட்களின், விலை,மாபிள் கல்லின் விலை, மற்றும் தொழிலாளர்களுக்கான கூலி உயர்வு ஆகியவற்றால் ஒரு வீட்டில் மல சல கூடம் நிறுவுவதற்கு மூவாயிரம் ரூபா வரை செலவாகின்றது என்றும் இந்நிலையில் திணைக்களம் வழங்கும் 700 ரூபா போதாது என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வறுமை நிலையில் உள்ள பல குடும்பங்கள் மல சல கூடத்தை நிறுவ முடியாத நிலையில் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## மட்டு நகரில் இசை நிகழ்ச்சி

தேனிசைச் செல்லப்பாவின் இசை நிகழ்ச்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் மேமாதம் 8ம், 9ம் திகதிகளில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

8ம் திகதி ஆரையம்பதிமகா வித்தியாலய மைதானத்திலும், 9ம் திகதி ஒட்டமாவடி மகாவித்தியாலய மைதானத்திலும் நடைபெறும். (05)

## வழக்கம் பரை முத்துமாரி அம்மன் இராஜ கோபுரம்

(மூளாய்)

தொல்புரம, வழககமபரை முத்துமாரி அம்மன் கோயில் இராஜகோபுர ஆரம்பக்கட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இக் கோபுரத்தைப் பூர்த்தி செய்ய ஏறக்குறையப் பத்துத் தொடக்கம் பதினைந்து இலட்சம் ரூபாவரை தேவைப்படுமென மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

தேவஸ்தானப் பரிபாலனச் சபையினர் இராஜ கோபுர வேலைகளை விரைவிற் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

1989ம் ஆண்டு ஆலயத் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது. (ப.1)

## புதுக்குடியிருப்பு 'ஜனசக்தி' புதிய நிர்வாகிகள்

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத்திற் புதுக்குடியிருப்பு மேற்கு ஜன சக்தி சனசமூக நிலையப் புதிய நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சி.கணேசமூர்த்தி உபதலைவர்: ச. சிவசுந்தரம், போகஷர்: பொ.பேரின்பநாயகம், செயலாளர்: சி. சுப்பிரமணியேஸ்வரன், உப செயலாளர்: கோ.பேரம்பலம், பொருளாளர்: ச.கனகரத்தினம், பத்திராதிபர்: பொ. சிவனேஸ்வரன்,நூல் நிலையப்பொறுப்பாளர்: கு. அமரசிங்கம்

மூவர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (03)

## கீரிமலை வீதி படுமோசம்

கீரிமலை காங்கேசன் வீதி தபோது பாவனைக்கு விடப்பட்டிருந்தும் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது இதனாற் சில சமயங்களில் கீரிமலை செல்லும் பஸ் வண்டிகள் காங்கேசன்துறை வரை சென்று திரும்ப மாவிட்டபுரம் வந்து பின்னர் கீரிமலை செல்கின்றன. இவ் வீதி திருத்தப்படுமா?

## தனியார் அதிகாரிகள் வருகை அதிகரிப்பு

நிலைமை சீராகியதைத் தொடர்ந்து தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள் தென் பகுதியிலிருந்து அடிக்கடி யாழ் நகருக்கு விஜயம்செய்து வருகின்றனர். இதனால் நகரிலுள்ள உல்லாசப் பயண விடுதிகளுக்கும் வருமானம் கிடைத்து வருகிறது.

## இந்திய ராணுவம் மேற்கொண்ட

# திட்டமிட்ட பிரசாரம் தியாகத்தின் முன் பிசுபிசுப்பு

''இதுவரை காலமும் எமது போராட்ட உணர்வுகளை இந்திய இராணுவம் இருட்டடிப்புச் செய்து மூடி மறைத்து வந்தது. இதற்காக இந்திய இராணுவம் பல பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டது'' என்று விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. கரிகாலன் செங்கலடிச் சிற்றூார்க் கிளை நடத்திய புத்தாண்டு விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிற் கூறினார்.

திரு. விநாயகமூர்த்தி தலைமை வகித்தார்.

திரு. கரிகாலன் தொடர்ந்து பேசுகையில்: விடுதலைப் புலிகள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையினாலும் தியாகத்தினாலும் இந்திய இராணுவத்தின் பொய்ப் பிரசாரம் முறியடிக்கப்பட்டுச் சுமுக நிலை தோற்றுவிக்கப்பட்டது.'' என்றார்.

''எமது பிராந்திய மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக எல்லாத்துறைகளிலும் அயராது உழைப்போம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நெற்சந்தைப்படுத்தும் சபை விரைவில் மீளமைக்கப்படும்

நெற்சந்தைப்படுத்தும் சபையை மீள அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்துடன் நெற்சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான 20 அரிசி ஆலைகளில் மூன்றைத்தவிர ஏனையவற்றை விற்பதற்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெற்சந்தைப்படுத்தும் சபையில் தற்பொழுது 1800 ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவர். இவர்களுக்கு இதற்குரிய நஷ்டஈடு வழங்கப்படும்.

1986 காலப்பகுதியில் நெல்லின் உற்பத்தி பத்து இலட்சத்து 127 புசலாக இருந்தது. இத்தொகையை எதிர்காலங்களில் பத்து இலட்சத்து 130 ஆக உயர்த்தத்தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

### வடக்கே வரும் ரயில்

## ஐந்து சேவைகள் இரண்டானது பயணிகள் பாடு திண்டாட்டம

உத்தரதேவி, யாழ்தேவி, இன்ரர்சிற்றி, தபாற் புகையிரதம், விசேட ரயில்சேவை என ஐந்து சேவைகளாகக் கொழும்பிலிருந்து, காங்கேசன்துறைவரை நடைபெற்றுவந்த ரயில்சேவை தற்போது இரு சேவைகளாக மட்டுமேநடைபெற்று வருகின்றது.

இதனாற் பெருமளவு பயணிகள் அநேகக் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கால்கடுக்க நிற்கவேண்டிய நிலைமையும், கதவுக் கம்பிகளில்தொங்கிக்கொண்டு உயிருக்கு ஆபத்தான முறையிற் செல்ல வேண்டிய நிலைக்கும் ஆளாகுவதால் தினமும் விபத்துக்கள் இடம்பெறும் சாத்தியம் உருவாகியுள்ளது.

அத்துடன் தற்போதுஇடம் பெறும் இரு ரயில் சேவைகளிலும் பெருமளவு பயணிகள் கொழும்பிலே ஏறுவதால் இடையிலுள்ள சிறு ரயில் நிலையங்களில் ஏறும் பயணிகளுக்கு இடம் இல்லாது போய் விடுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எயர்லங்கா விமானத்திற்கு தொடரும் குண்டுப் புரளி

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இறங்க விருந்த எயர்லங்கா விமானத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக சென்னை விமான நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த அனாமதேய தொலைபேசி அழைப்பு காரணமாக மீனம்பாக்கம் விமான நிலையம் பரபரப்பு அடைந்தது.

இதைத் தொடர்ந்து விமானம் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டு விமானத்தில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. பின்னர் இது பெரும் புரளி என தெரிய வந்ததையடுத்து இரண்டரை மணித்தியாலத்தின் பின் கொழும்பு நோக்கி புறப்பட்டது.

ஏற்கனவே துபாய் சர்வதேச விமான நிலையத்திற்கும் நான்கு தடவைகள் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது துபாய் குண்டுப்புரளியையும் ஆராயும் பொருட்டு விஷேதுப்பறிவாளர் குழுதுபாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இதே சமயம் எயர்லங்கா விமானங்களுக்கு விடுவிக்கப்படும் அக்கருத்தை அடுத்து இந்நிறுவனம் உறுதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

## முக்கிய பிரமுகர்களுக்கு சுங்கச்சலுகை இனி இல்லை

வி. ஐ. பிக்கள் என அழைக்கப்படும் மிக முக்கிய பிரமுகர்களும் இனிமேல் இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குப் போகும் போதும் நாடு திரும்பும்போதும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சாதாரண மனிதர்களைப்போல் வழமையான சுங்கப் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

விமான நிலையத்தின் பிரத்தியேக வழியாக வி. ஐ. பி. கள் வெளியேறலாம் என்றால், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இவ்வசதியைக் கொண்டு தமது சுங்க ஒழுங்கு விதிகளிலிருந்து விதிவிலக்களித்திருப்பதாகக் கருதக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமுகர்களாக இருந்தாலும் சாதாரண மனிதர்களாயிருந்தாலும் எல்லோரையும் சமனாக நடாத்த வேண்டும்மெனவும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

பிரமுகர்கள் தம்மோடு கொண்டு வராத பொதிகளையும் கவனமாகப் பரிசோதிக்க வேண்டும் எனவும் சுங்கப் பகுதியினரை ஜனாதிபதி பணித்துள்ளார்.

## மே தின பவனியில் மிகப் பெரிய 'கட் அவுட்'

(சங்கானை)

மே தினத்தன்று சித்தன்கேணிச் சந்தியிலிருந்து புறப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட அலங்கார ஊர்திப் பவனியில் பிரபாகரனின் முழுஉருவக் 'கட் அவுட்' படம் வைக்கப்பட்டிருந்த அலங்காரஊர்தி அனைவரதும் கவனத்தைக் கவர்ந்தது.

மிகவும் பெரிய தோற்றத்தைக் கொண்ட இந்த அலங்கார ஊர்தியில் விவசாயத் தொழிலாளர், கடற்றொழிலாளர் மற்றும்பல்வேறுதொழிலாளர்களின் செயற்பாடுகள் இடம் பெற்றிருந்தன.

சித்தன்கேணியிலிருந்து ஏனைய பல ஊர்திகள் சகிதம் புறப்பட்ட இந்த ஊர்தி பண்டத்தரிப்பு, பெரியவிளான், அளவெட்டி, தெல்லிப்பழை ஊடாக கே. கே. எஸ் வீதிவழியாக யாழ்நகரைசென்றடைய சுமார் ஆறு மணித்தியாலங்கள் சென்றன. ஊர்திபெரிதாக இருந்தபடியால் பல இடங்களில் வீதியின் குறுக்கேயிருந்த பதிந்த மரங்கள் வெட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(13)

## பரிசளிப்புவிழா

(கல்வியங்காடு)

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயச் சங்கம் சனசமூக நிலையம், மங்கையர்க் கழகம் விவசாயக் கழகம் ஆகியனவற்றின் ஆண்டு விழாவும் பரிசளிப்புவிழாவும் திரு க. முத்துலிங்கம் ஜே பி தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு சி முருகேசபிள்ளை பிரதம விருந்தினராகவும் யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப புஷ்பரத்தினம் வலி கிழக்குப் பிரதேசசபை விசேட ஆணையாளர் திருமதி த. பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்கள்.

பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் பேச்சுக்களும் மற்றும் இசை நடனம் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### யாழ்நகரில்

கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட 'வித்துக்கள்' தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5. 30 மணிக்கு யாழ். திருமறைக்கலா மன்ற அரங்கில் அருட்திரு இல்லறி ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ள ஆய்வரங்கில் எ. எஸ். தங்கராஜா, க. சொக்கலிங்கம், கலாநிதி இ. பாலசுந்தரம், கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றுவர்.

## விளையாட்டுச் செய்திகள்

## சைக்கிள் ஓட்டப் போட்டி

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் ஆண்களுக்கான 52 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி வலது குறைந்தவர்களுக்கான 3 சில்லு சைக்கிள் ஓட்டப் போட்டி ஆகியவற்றை நடாத்தவுள்ளது.

ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி செஞ்சிலுவைச் சங்க பணிமனைக்கு முன்னால் ஆரம்பமாகி கண்டி வீதியால் பளைக்கு சென்று மீண்டும் அதேபாதையில் ஆரம்பமான இடத்தை வந்தடையும்.

ஆண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி காலை 6.30 ற்கும் மரதன் ஓட்டப் போட்டி 6.45 ற்கும், பெண்கள் சைக்கிள் ஓட்டப் போட்டி 8 மணிக்கும் அதனைத் தொடர்ந்து வலது குறைந்தோருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கவிருப்பதாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் டாக்டர் R. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் வடமாகாணத்தில் உள்ளோர் எவரும் பங்குபற்றலாம். பங்கு பற்ற விரும்புவோர் 6 ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு.கே. ஏகாம்பரத்துடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

அன்றைய ஏனைய நிகழ்ச்சிகள் 9 மணிதொடக்கம் 4மணி வரை கண்காட்சி (செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சுயதொழில் செய்வோரினால் உருவாக்கப் பெற்ற பொருட்கள் ஓவியக் கண்காட்சி. இரத்ததானம், சிரமதான மூலம் வட்டுக்கோட்டை கிராம வைத்தியசாலையை துப்பரவு செய்தலும் தீந்தை பூசலும், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குதல் (16)

## 'மைலோ' கிண்ணப் போட்டிகள்

'றமழான்' திருநாளை முன்னிட்டும், பாடசாலைகளின் விடுமுறையினாலும் சிறிது காலமாய் இடைநிறுத்தப்பட்டிருந்த 'மைலோ' வெற்றிக் கிண்ணத் தேசிய உதைப்பந்தாட்டப் போட்டி மீண்டும் நாளை 4 - ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியின் முதற் சுற்று இம்மாத இறுதியிலும், இரண்டாவது சுற்றும் இறுதிப் போட்டிகளும் யூன் மாதத்திலும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது தொடக்கத்தில் 'லீக்' முறையில் நடைபெறும் போட்டிகள், பின் நொக்அவுட் முறையில் நடைபெறும் என்று தெரியவருகிறது.

முதன் முதலாகத் தேசிய ரீதியில் நடத்தப்படும் இப்போட்டியில், 12 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் அணி 35, 14 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் அணி 68, 16 வயதிற்கு உட்பட்டவர்கள் அணி 74, 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அணி 74 ஆக மொத்தம் 250 அணிகள் கலந்துகொள்கின்றன.

இப்போட்டிக்கு இணைப்பு உத்தியோகஸ்தர்களாகக் கடமையாற்றத் திருகோணமலை அருட் சகோதரர் A. S சூசைதாசன், பதுளை W. பிரேமதுங்க, காலி W. M ஆசிம், நீர்கொழும்பு W. A காமினி பெர்னான்டோ, சிலாபம் A.M ஜாப்பா, மாத்தற I· விமலசூரிய, இரத்தினபுரி K. S. B கெகில்கடுவ, யாழ்ப்பாணம் என். சோமசுந்தரம், களுத்துறை எம். எம். சமீர் நாவலப்பிட்டி, H. A டர்மசேனா ஆகியோரை இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் நியமித்துள்ளது.

## முல்லை ஐக்கியக் கழகம் வெற்றி

4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் ''கிறீடா'' பத்திரிகை ஸ்தாபனத்தால் நடாத்தப்படும் கிரிக்கற் போட்டியிற் கலந்துகொள்ளும் அணியைத் தெரிவு செய்வதற்காகச்சென்ற 27.04.90 ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கற்போட்டியில் மிகவும் விறு விறுப்பான இறுதிப்போட்டியில் முல்லைத்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் திரு. க, காாத்திகேசுவினால் ஒழுங்குசெயய்யப்பட்ட இப்போட்டியில் திரு. எஸ். இரகுநாதபிள்ளை (உ. அ. அ. தலைமைப் பீடம்) பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்குச் சான்றிதழ்களையும் முதலாம் இடத்தைப்பெற்ற அணிக்கு ரூபா 1000/- இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு ரூபா 500/- யும் வழங்கினார்.

இவ் வைபவத்தில் திரு. க. மாரிமுத்து (காரியாலய உதவியாளர்) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். இப்போட்டியில் வெற்றிபெற்ற ப. வி. க. அணி இன்று 3ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு செல்கின்றது.

இவ் அணியில் செ. அருமைநாயகம் (முகாமையாளர்) ம, வேலும்மயிலும் (தலைவர்) தி. கண்ணன், க, தேவதாஸ், க. தனபாலசிங்கம் மி. றெஜனோல்ட் செ. இராசேந்திரன், செ. பவேந்திரன், க. லெனின், ஆகிய வீரர்கள் இடம்பெறுகின்றனர்.

## ஜேர்மன் பயிற்சியாளர் வருகிறார்

தலை சிறந்த உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களில் ஒருவரான மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த பர்க்ஹார்ட் சியேஸ் இலங்கையில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஆட்ட நுணுக்க பயிற்சிகளை வழங்க இலங்கை வரவுள்ளார்.

இவர் இலங்கையில் பத்து மாத காலம் தங்கியிருந்து இப் பயிற்சியை பயிற்றுவிப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

## பருவகால கிரிக்கெட் ஆரம்பம

இங்கிலாந்தில் ஆரம்பமாகியுள்ள இவ்வாண்டுக்கான உள்ளூர் கிரிக்கெட்பருவகால ஆட்டங்களில் பல உலகப் புகழ் பெற்ற வீரர்கள் பலவேறு கழகங்களுக்காக ஆடவுள்ளனர்.

புகழ்பெற்ற ஆட்டக்காரரான இயன் பொத்த வோசஸ்டர்ஷயா கழகத்தின் சார்பிலும், மேற்கிந்திய கப்டனான விவியன் ரிச்சர்ட் களமோர்கள் கழகத்திற்காகவும் ஆடி வருகின்றனர்.

தமிழ் மொழித் தினம் மே - 8ல்

# நாடு தழுவிய வகையில் கொண்டாட ஏற்பாடு!

இம்மாதம் எட்டாம் திகதி நாடளாவிய ரீதியில் தமிழ் மொழித் தினம் கொண்டாடப் படவுள்ளது.

இது பற்றிக் கல்வி ராஜாங்க அமைச்சின் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மாகாணப் பணிப்பாளர் மூலம் 1990 - 01 – 05ம் திகதியிட்டு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்துக்கு ஏற்ப நாடெங்கிலும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்கும் சகல பாடசாலைகளிலும் எதிர் வரும் எட்டாம் திகதி தமிழ் மொழித் தினம் கொண்டாடப் படவேண்டும்.

அத்துடன் தமிழ் மொழித் தினத்தைக் கொண்டாடுமுகமாகப் பாடசாலை மட்டத்திலிருந்து மாகாண மட்டம் வரை நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் மே 22ம் நாளுக்கு முன்னர் கல்வி ராஜாங்க அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேசிய மட்டத்திலே எதிர் வரும் ஜூன் 15ம் 16ம் நாட்களிற் கொழும்பில் இப் போட்டிகள் நடாத்தப்பட்டு 16ம் நாள் மாலையில் தமிழ்த் தினவிழா எடுக்கப்படும் எனத் திரு. சபாநாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈ. ஜனநாயக முன்னணி அனுதாபம்

# மலையகத்தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பியவா அஸீஸ்

'இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், தொழிற்சங்கவாதியுமானஜனாப்ஏ.அஸீஸ் அவர்களது மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். அன்னார் கடந்த காலங்களில் மலையகத்தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள்தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடுகளையும், அண்மைக் காலங்களில் எம்முடன் மேற்கொண்ட உறவயும் இங்கு நினைவு கூருகின்றோம்'.இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்ட,இலங்கை இந்தியக் காங்கிரஸ் வெறும் இந்திய வர்த்தகர்களையே உறுப்பினராகக் கொண்டு செயற்பட்ட நிலைமையை மாற்றித் தோட்டத் தொழிலாளர்களையும் இலங்கை இந்தியக் காங்கிரஸ் உள்ளடக்கிய பெருமை ஜனாப் ஏ.அஸீசையே சாரும். ஆரம்பத்தில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் இணைச் செயலாளராகவும் 1942ம் ஆண்டு தலைவராகவும் இருந்தார். பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளரர்க இருந்த காலகட்டத்தில் ஜனாப் ஏ.அஸீஸ் அவர்களுக்கும், சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கட்கும் ஏற்பட்ட செல்வாக்குப்போட்டியில் ஜனாப் அஸீஸ் அவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இருந்து வெளியேற்றப்பட்டார்.'

'இவ்வாறு வெளியேறிய அஸீஸ் அவர்கள் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் தொழிற்சங்கம் அமைத்தார். ஆரம்பத்தில் இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அத்து மீறல் சட்டத்தை மீறித் தோட்டத்திற்குள் சென்று தொழிற்சங்கக் கிளைகளை அமைக்கும் துணிச்சலான பணியைமேற்கொண்டதன் மூலம் அஸீஸ் அவர்கள் இலங்கை அரசாற் கைது செய்யப்பட்டார். ஜனாப் அஸீஸ் அவர்கள் தொடர்ச்சியாக மலையகத்தமிழ்பேசும் மக்களுக்காக மேற்கொண்ட போராட்டங்களாலும், சர்வதேச தொழிற்சங்க மாநாடுகளில் மலையகத்தமிழ் பேசும் மக்களின் அவல நிலையை எடுத்துரைத்தமையாலும் மலையகத் தமிழ் மக்களின் மத்தியில் முற்போக்காளர், துணிச்சல் மிக்க வீரர் என்றபெயர்பெற்றார். என ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் வே பாலகுமார் விடுத்துள்ள இந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகோற்சவம்

(மூளாய்)

அருள்மிகு மூளாய் சித்தி வினாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஏறக்குறைய 25 வருடங்களின் பின் இம்முறை சிறந்த முறையிற் சப்பறம் அமைத்துச் சப்பறத் திருவிழா நடைபெறுகிறது. 8ம் திகதி இரதோற்சவம், 9ம் திகதி தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ப-1)

## 'கைதியின் சரிதை' முதல் இடம்

அரியாலை மேற்குக் காந்தி சனசமூகநிலையத்தின் 40வது ஆண்டுவிழாவின் கலைநிகழ்ச்சியில் இடம் பெற்ற நாடகப் போட்டியில் தம்பிஐயா இல்லம் மேடையேற்றிய 'கைதியின் சரிதை' என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

காந்தி சனசமூக நிலைய மாதர் சங்கத்தினால் இசைமணி எஸ். மார்க்கண்டுவின் நெறியாள்கையில் மேடை ஏற்றப்பட்ட ''ஞான சௌந்திரி'' இசை நாடகம் எல்லோரதும் பாராட்டைப்பெற்றது. இசைமணி எஸ். மார்க்கண்டுவுக்கு பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர். (27)

## சுவையானசெய்திகள்

### இயற்கை கட்டிய பாலம்

லெபனான் நாட்டில் நதியின் குறுக்கே முழுக்க முழுக்க பாறைகளால் ஆனபாலம் ஒன்று உள்ளது, இதனைக் கட்டியது யார் தெரியுமா? இயற்கைதான்.

### வேடிக்காத துவக்கு

ரஷ்யாவின் கிரம்ளின் மாளிகையில் ஒரு துப்பாக்கி இருக்கின்றது அதன் எடை 40ஆயிரம் கிலோ இதுவரை இந்த துப்பாக்கியை சுடுவதற்குப் பயன்படுத்தவே இலலையாம்.

### இவ்வளவு பிள்ளைகளா?

மொராக்காவை கி.பி. 1291 முதல் 1361 வரை ஆண்ட மன்னர் சுல்தான் அபுல்ஹசன். இவர் தனது எண்ணிலடங்கா மனைவியர் மூலம் பெற்ற மழலைச் செல்வங்கள் எத்தனை தெரியுமா? மயக்கம் போட்டு விடாதீர்கள் 1882?

### ஒருகுலை பல கிலோ

சிலி நாட்டில் சலூண்டியாகோ என்ற இடத்தில் ஒரு திராட்சைத் தோட்டத்தில் விளைந்த ஒரு திராட்சைக் குலையின் எடை 94 கிலோ இருந்தது. அப்பாடா, இவ்வளவு பெரிய குலையில் எத்தனை திராட்சைப் பழங்கள் இருந்திருக்கும்?

## வானொலியில் இன்று

03. 05. 90 வியாழன்

காலை

| | |
|---|---|
| 5.05 | தோத்திரமாலை-பார்த்தசாரதி சுப்ரபாதம் |
| 5.30 | சாயிபஜன் |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 8.00 | லயவிந்யாசம் ரி.பாக்கியநாதன் |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | தவில் கச்சேரி-வலங்கைமான் சண்முகசுந்தரம் |
| 10.45 | பக்திப்பாடல்கள் |
| 11.00 | வயலின்-லால்குடி ஜெயராமன், |

மாலை

| | |
|---|---|
| 6.15 | இந்துசமயப்பேச்சு |
| 6.30 | வளரும்பயிர்-நடத்துபவர் வனஜா ஸ்ரீநிவாசன் |
| 6.45 | பாவளம்-தொகுப்பு சில்லையூர் செல்வராஜன் |
| 7.00 | கிராமசஞ்சிகை-வி.கே.சிவஞானம் |
| 7.30 | மெல்லிசைப் பாடல்கள் |

இரவு

| | |
|---|---|
| 9.20 | பக்திப்பாடல்கள் |
| 9.30 | கலந்துரையாடல் |
| 10.00 | இசைக்கச்சேரி-எஸ்.பத்மலிங்கம் |

## முரசொலிக்கு வந்த கடிதம்

# ஒவ்வொரு மருந்துக் கடையிலும் பாமஸிஸ்ட் முழுநேரம் அவசியம்

ஆசிரியர்
முரசொலி,

ஒவ்வொரு மருந்துக்கடையிலும் ஒரு பாமஸிஸ்ட் முழு நேரம் கடமை புரிய வேண்டும் என்று யாழ். உணவு மருந்து வகைக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. (முரசொலி 22. 4. 90)

தென்னிலங்கையில் வைத்திய அட்டையின்றி (ஆங்கில வைத்தியரின்) எவ்வித மருந்துகளையும் விற்பனை செய்ய முடியாது. ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்களின் வைத்திய அட்டைகளுக்குக் கூட ஆங்கில மருந்துகள் விற்கப் படுவது இல்லை. இதுவரை யாழ். மாவட்டத்தில் சில மருந்துக் கடைகளில் வைத்திய அட்டைகளின்றி தாராளமாக மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இப்படியான விற்பனை செய்வதைத் தடைசெய்வது அவசியமாகும். ஆங்கில வைத்தியர்களின் வைத்திய அட்டைகள் இன்றி ஆங்கில மருந்துகள் விற்பனை செய்வது உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும்.

இது மட்டும் அல்ல யாழ் மாவட்ட.த்தில் ஆயுள்வேத ஹோமியோபதி வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை தாராளமாக பாவித்து வருகின்றார்கள் இவர்கள் சட்டப்படி ஆங்கில மருந்துகளை தாம் வைத்திருக்கவோ, நோயாளிகளுக்கு கொடுக்கவோ முடியாது.மருந்துகளின் பின்விளைவுகள் தெரியாமல், வைத்திய நிபுணர்களே பாவிக்கத் தயங்கும் மருந்துவகைகளை தாராளமாக பாவிக்கிறார்கள். இதனால் நோயாளிகளின் உடல் நலம் பாதிக்கும் அபாயம் உண்டு.

ஆங்கில வைத்தியர் அல்லாத வைத்தியர்களுக்கு ஆங்கில மருந்துகள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட வேண்டும். யாழ்மாவட்ட உணவு மருந்துவகைக் கட்டுப்பாட்டு அதிகாரி மருந்துகளின் வீண் விரையத்தை தடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

யாழ்ப்பாணம். S. சண்முகலிங்கம்

# மேற்கு வீதியால் அதிக பஸ்சேவை இடம் பெறுமா?

ஆசிரியர்
முரசொலி

காரைநகர் மேற்கு வீதியால் இ. போ. ச (C. T. B) வண்டிகள் ஒன்று இரண்டு தான் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் உரிய நேரத்தில் தேவை ஏற்படும்போது போக்குவரத்தை தொடர்வதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. கருங்காலி, வாரிவளவு, ஆலடி, புதுறோட் போன்ற இடங்களில் இருந்து பிரயாணம் செய்யும் பிரயாணிகளாகிய நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வலந்தலைச் சந்தியை நோக்கி விரையவேண்டி இருக்கின்றது. இக்குறை நீங்க நடவடிக்கை எடுப்பார்களா?

புதுறோட்,
காரைநகர் கே. அருளானந்தம்

பருத்தித்துறை நகர புனரமைப்பு

# நிதி ஒனனும் வந்து சேரவில்லை; வேலைகள் இடையில் நிறுத்தம்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை நகர சபைப் புனருத்தாரண திருத்த வேலைகளுக்கான அரசநிவாரணப்பணம் இதுவரை வந்து சேராமையால் நடைபெறத் தொடங்கியுள்ள வேலைகள் இடைநடுவிலும் நடக்க வேண்டிய வேலைகளைத் தொடங்க முடியாமலும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைப் புனர் நிர்மாண வேலைகளுக்கென மத்திய அரசினால் 4½ கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தும் இதுவரை இதற்குரிய பணம் மேற்படி நகர சபையின் கைக்கு வந்துசேரவில்லை.

அத்துடன் பதினெட்டு வீதிகள் மீள்மதிப்பீடு செய்து அங்கீகாரம் பெற்று மாகாண சபைக்கு அனுப்பப்படும். இதுவரை எவ்வித நிதியும் வழங்படததால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் ஸ்தம்பித நிலையில் நிற்பதோடு புதிய வேலைகளையும் தொடரமுடியவில்லை என பருத்தித்துறை நகரசபைக் செயலாளர் திரு. க. சண்முகநாதன் தெரிவித்தார். (39)

## விக்னேஸ்வரர் உற்சவம்

(சங்கானை)

பெரியவிளான் வட சேரி விக்கினேஸ்வர ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 29-ம் திகதி (29 . 4. 90) ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர் வரும் 8ம் திகதியன்று இரதோற்சவமும்மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## புதிய பஸ்நிலையம்

தெல்லிப்பழை சந்தியில் புதிய பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது இதற்கான காணியை வலி வடக்கு பிரதேச சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

# பெனாஸிருக்கு எதிராக புதிய சட்டச் சவால்கள்

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

அவர் பதவியில் இருப்பதற்காக அரசியல் நெறிமுறைகளை மீறி வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்திப் புதிய சட்டரீதியிலான சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில் பெனாஸிர் பூட்டோ எதிர்நோக்கும் இரண்டாவது சவால் இதுவாகும்.

தேசிய சபையின் சபாநாயகருக்கு இது சம்பந்தமான மகஜர் ஒன்றை எதிர்க்கட்சியின் உதவியாளர் அபிதா ஹுசெய்ன் அனுப்பியுள்ளார்.

இருநூற்றிமுப்பத்தியேழு உறுப்பினர்களைக் கொண்ட சபையில் கடந்த நவம்பர் மாதம் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடிக்க பூட்டோ அரசாங்க இயந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருப்பதாக மகஜரில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பூட்டோ சகல நெறிமுறைகளையும் பாரதூரமாக மீறியிருப்பதால் சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து அவரை அகற்ற முடியும் என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன.

## டச் வீதி குன்றும் குழியும்

(சங்கானை)

சங்கானையிலிருந்து சித்தன்கேணி ஊடாக மூளாய்க்குச் செல்லும் டச் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாக உள்ளது.

இவ் வீதியை விரைவில் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சித்தன்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம் பொதுவேலைப் பகுதிப் பிராந்தியப் பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிற் கோரிக்கை விடுத்துள்ளது.

டாக்டர்கள்

## வெளிநாடு போவதற்கு முன் அனுமதி தேவை

வெளி நாடுகளுக்கு உத்தியோகப் பூர்வமான, தனிப்பட்ட விஜயங்களை மேற்கொள்ளும் வைத்திய அதிகாரிகள், பல்வைத்தியர்கள் பிரயாணம் மேற்கொள்ளும் திகதிக்கு இரண்டு வாரத்திற்கு முன்னர் லீவுக்கு மனுவை அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நடக்காவிடின் லீவு மனுக்கள் நிராகரிக்கப்படும் எனச் சுகாதார அமைச்சு வழங்கிய பணிப்புரையின் சுற்றறிக்கை தெரிவித்துள்ளது.

## ஆசிரியர் இடமாற்றச்சபை மே 5இல் திருமலையில் கூடும்

முதன்முறையாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இடமாற்றச் சபை இம்மாதம் 5ஆம் திகதி திருகோணமலையில் உள்ள கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சில் கூடவுள்ளது.

இலங்கை தமிழாசிரியர் சங்கமும் இவ் இடமாற்றச் சபையில் கலந்து கொள்ள இருக்கின்றது.

## புதிய மாணவரை சேர்ப்பதற்கு புதிய கட்டுப்பாடு அமுலாகும்

தமது பிள்ளைகளை முதலாம் ஆண்டு வகுப்பில்சேர்க்க விரும்பும் பெற்றோர் தாம் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் போலியானவை அல்ல என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சத்தியக் கடதாசியை பாடசாலைகளில் கையளிக்க வேண்டும்.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது ஏற்படும் தில்லுமுல்லுகளைதடுத்து நிறுத்தும் முகமாகவே இப்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு இளைஞர் தெல்தெனிய ஆற்றில் பலி

இலங்கைப் பரிபாலன சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு, பயிலுநராகப் பயின்று கொண்டிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த ரகுபதி என்ற இளைஞர் நண்பர்களுடன், கண்டி தெல்தெனிய ஆற்றில் நீராடும் போது ஆற்று நீருடன் அள்ளுப்பட்டுப் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது உடல் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தடுப்பு முகாமிலிருந்து 223 சிங்கள இளைஞர் விடுதலை

அநுராதபுரம் ரத்னமாலிப் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 223 இளைஞர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

இதனை முன்னிட்டு 223 வெள்ளைப் புறாக்கள் அங்கு பறக்க விடப்பட்டன.

நாசகார வேலைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட, மற்றும் சரணடைந்த இளைஞர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மறுவாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர உட்பட உயரதிகாரிகள் பலரும் மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## பவள விழா குலுக்கல் ஒத்திவைப்பு

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயபவள் விழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தினால் விற்பனை செய்யப்பட்ட அதிர்ஷ்ட இலாபச்சீட்டு குலுக்கல் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அதிர்ஷ்டம் பார்க்கப்படும் புதிய திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

## தக்காளி விலை அதிகரிப்பு

நிலைமை சீராகியதைத் தொடர்ந்து தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகையால் மரக்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளன தக்காளிப் பழம் முன்பு எப்போதும் இல்லாதவாறு கிலோ 20 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## உப்பு விலை அதிகரிப்பு

ஒரு கிலோவுக்குப் 10 சதத்தால் உப்பின் விலையை அதிகரிப்பதற்கு கைத் தொழில், விஞ்ஞான தொழில் நுட்பத் துறை அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

என்றுமில்லாத வகையில் இம்முறை புத்தளத்திலே 30, 000 தொன்னுக்கு அதிகமான உப்பு உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

## சர்வோதய பொறுப்பாளராக நியமனம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மாவட்டச் சர்வோதயப் பொறுப்பாளராக திரு. ப. தில்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் தற்போது. வடமராட்சிச் சர்வோதயப் பொறுப்புகளைக் கவனித்து வருகிறார்.

முன்னர் கிளிநொச்சிமாவட்டச் சர்வோதயப் பொறுப்பாளராக இருந்த திரு. கே. வேலாயுதபிள்ளை விலகிக் கொண்ட காரணத்தினாலே மேற்படி நியமிக்கப்பட்டுள்ளார்.

## குறுகிய பஸ் சேவை ஆரம்பமாகுமா?

முன்னர் நடைபெற்றுவந்த யாழ்பஸ் நிலையம்—நாவலர் வீதி—மாம்பழம் சந்தி பஸ் சேவை கடந்த பல வருடங்களாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

808 பாதை இலக்கமுடைய இச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் படி பொதுமக்கள் வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையைக் கோரியுள்ளனர்.

## புதிய கிளை

பச்சிலைப்பள்ளிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தம்பலகாமத்தில்நிர்மாணிக்கபட்ட புதிய கிளைக் கட்டிடம் மேமாதம்ஐந்தாம்திகதிசங்கத் தலைவர் ஏ. பீ. ஜோர்ஜ்ஆல் திறந்து வைக்கப்படவுள்ளது

## ஜப்பான் பெருமளவில் கடனுதவி

கடந்த இரு வருடங்களில் ஜப்பான் 20 கோடி டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது.

விசேடத் தேர்ச்சி பெற்ற தொழில்களிலே ஜப்பானில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன என்பதே தற்போதய கொள்கை என்பதால் அக் கொள்கை இப்போது ஆராயப்பட்டு வருகின்றது.

# எல். பி. காஸ் உற்பத்தி 36,000 தொன்னாக அதிகரிக்கும்

தற்சமயம் வருடந்தோறும் 20,000 மெற்றிக்தொன் எல. பி. காசை உற்பத்தி செய்துவரும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தொகை வருடமொன்றுக்கு 36,000 மெற்றிக்தொன்னாக அதிகரிக்கவுள்ளதென மின்வசதி அமைச்சர் திரு. சந்திரா பண்டார தெரிவித்துள்ளார்.

எல்பி காஸின் தேவைகள் தற்போது அதிகரித்து வருவதால இத்தொகை தேவைகளைச் சமாளிக்கப் போதுமானதல்ல. எனவேவெளிநாட்டிலிருந்து காஸ் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது.

எனவே இந்நிலையை நிவர்த்தி செய்யும் முகமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடுத்த ஐந்து வருடக் காலத்திற்கு விரிவான திட்டம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளதுஅடுத்தஐந்து வருடக் காலத்திலும் உள்ளூர்ச் சந்தையிற் பெற்றோலியப் பொருட்களின் விற்பனை அதிகரிக்கப்படும் எனவும் தெரியவந்துள்ளது.

## சண்டிலிப்பாய் பகுதியில் மூலவள ஆய்வு ஆரம்பம்

(சங்கானை)

சண்டிலிப் பாய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவில் மூலவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பிரிவிலுள்ள இயற்கை மூல வளங்கள் விவசாயம் கடற் தொழில், கைத்தொழில், மற்றும் சமூகப் பிரிவில் மனிதவளம் போன்ற துறைகளில் இந்த ஆய்வு கிராம மட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுவருவதாக உதவி அரசாங்க அதிபர் திரு.கே. சிவசம்பு தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி சங்கங்கள் பாடசாலைகள் சுகாதார நிலையங்கள் ஆகிய பொது நல நிறுவனங்களுக்கு ஊடாக இந்த ஆய்வுகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (13)

## திறந்த பல்கலைக்கழகத்தில் புதிய கற்கைநெறி ஆரம்பம்

(கொக்குவில்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் எதிர்வரும் மே, யூன் மாதங்களில் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

முகாமைத்துவ டிப்ளோமா இயந்திரவியல் டிப்ளோமா ஆகிய துறைகளுக்கு விண்ணப்பங்கள் மிக விரைவில் கோரப்படவுள்ளன. கற்க விரும்புபவர்கள் இம்மாத நடுப்பகுதியில் யாழ். பிராந்தியநிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## சாரணர் பயிற்சிக்கு யாழ் இளைஞர் தேர்வு

மே மாதம் 4ம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை மீரிகம சாரணர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் சாரணத் தலைவர்களுக்கான பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கென காங்கேசன்துறை சாரணர் குழுவைச் சேர்ந்த 21 பேரும் யாழ் மாவட்ட சாரணர் யாழ் குழுவைச் சேர்ந்த 6 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## பஸ் சேவை

புங்குடுதீவு பகுதிகளில் வாழும் பொது மக்களின் நன்மை கருதி புங்குடுதீவு நயினாதீவு பல.நோ.கூ.சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் மக்கள் கடைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருந்து சேவையாற்றி வருகின்றது.

புங்குடுதீவு பெரும்காடு கந்தசாமி கோவிலடிப் பகுதியிலும் தல்லையபற்று பகுதி தலைமைசெயலகத்திற்கு அருகில் அமைந்திருக்கும் மக்கள் கடைசுள் இவ்வாறாக சேவை புரிந்து வருகின்றது.

இந்த நற்சேவைகளால் அப்பகுதி மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்திசெய்யக் கூடியவகையில் அமைந்திருப்பதும் பாராட்டுக்குரிய விடயமென தெரிவிக்கப்படுகிறது.

## இறந்தோர் நினைவாக இரத்ததானம்

இனக்கலவரத்தின் போது, தீவிரவாத நடவடிக்கைகளின் போதும் உயிர் துறந்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஒன்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டதோடு இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரத்ததானமும் வழங்கப்பட்டது.

## சிலைகளுக்குள் 'ஹெரோயின்'

மூன்று சமயச் சிலைகளுக்குள் ஒன்பதுஇலட்சம்பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்த முயற்சித்த ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

மத்திய கிழக்கு நாட்டிற்கு ஆயிரத்திஎண்ணூறு டொலர் நோட்டுக்களைக் கடத்த முயன்ற நபர் ஒருவரும் சுங்க அதிகாரிகளாற் கைது செய்யப்பட்டார்.

## குறை தீருமா?

புங்குடுதீவுப்பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளுக்கு மின் குமிழ்களைப் பொருத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிவருகின்றார்கள்

மேலும் இப்பகுதிகளிலுள்ள பிரதான வீதிகள் கடந்தபல வருடங்களாகக் குண்டும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் அவ் வீதிகளால் இரவு நேரங்களில் நடந்து செல்ல முடியாத நிலையில் பெரும் துன்பமடைந்து வருகின்றனர்.

இந்த நிலையிலிருந்து அப்பகுதிமக்களை காப்பாற்ற சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அக்கறை காட்ட முன்வருவார்களா என மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (20)

## நாட்டுக் கூத்து

யாழ் புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி தனிநாயகம் தமிழ் மன்றம் வழங்கும் 'வித்துக்கள்' என்னும் பொருள் பற்றிய நாட்டுக் கூத்து ஒன்று கொழும்புத்துறை புனித சவெரியார் குருத்துவக்கல்லூரி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை 6. 30 மணியாளவில் நடைபெறவுள்ளது.

கவிஞர் தேவதாசனின் ஆக்கமான இந்தநாட்டுக் கூத்துக்கு அங்கு கல்வி பயிலும் குருமாணவர்களின் பங்களிப்பு மேலும் மெருகூட்டப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ மண்ணை எவரும் மீள ஆக்கிரமிக்க விடோம்

(பரந்தன்)

தமிழீழ மண்ணை அந்நியர் எவரும் மீண்டும் ஆக்கிர மிக்க இடம் கொடுக்க மாட்டோம். இதற்காக நாம் தொடர்ந்து போராடுவோம். எமது உரிமைக்காகக் குரல் கொடுக்க ஒவ்வொரு தமிழனும் தயாராக இருக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சகலரும் விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டும்'

இவ்வாறு அழைப்பு விடுத்தார் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணி வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன். பரந்தன் குமரபுரம் விளையாட்டு மைதானத்தில் 1.5.90 மாலை நடைபெற்ற மாபெரும் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு மேலும் உரையாற்றுகையில், ஒடுக்கு முறைக்கெதிராக உலகின் பல இடங்களிலுள்ள மக்கள் போராடினர். சுதந்திரமாகவும் வாழ்கின்றனர். நாமும் 17 வருடங்களாகப் போராடினோம். முடிவில் தற்போதைய சூழலில் ஓர் அமைதி தோன்றியுள்ளது. இது நிரந்தர மானதா என்பது கேள்விக்குறியே. எமது மண் நிரந்தரமாக விடுவிக்கப்படவில்லை. இந்த மண்ணில் சகல ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும் போராடி வருகின்றோம். தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகத்துக்காகப் போராடி வருகின்றோம். எமது மண்ணை இனி எவரும் ஆக்கிரமிக்க முடியாது என்று கூறினார்.

கிளிநொச்சி பரந்தன் பகுதியின் சகல தொழிற் சங்கங்களும் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி உரையாற்றுகையில்,

''எமது பகுதியிலுள்ள அநேகமான தொழிற் சங்கங்களின் தலைமைதென்பகுதியில்இருப்பதால், இன ரீதியான எமது போராட்டத்துக்கோ, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை நிலை நாட்டும் எமது போராட்டத்துக்கோ தொழிற்சங்கங்கள் குரல் கொடுக்க முன்வரவில்லை, இனிமேலாவது இங்குள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் ஒன்றுபட்டு ஒரே அணியில் சேர்ந்து தொழிற்படவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் அனைத்து தொழிற் சங்கங்களையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் தொழிலாளர்கள் கலந்து கொண்ட பிரமாண்டமான ஊர்வலம் பரந்தன்இரசாயனத் தொழிற்சாலை வளவிலிருந்து புறப்பட்டு கூட்ட மைதானத்தை வந்தடைந்தது,

மேலும்இக் கூட்டத்தில் தமிழீழ தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு வில்லிஸ் உட்பட பல தொழிற்சங்கப் பிரமுகர்களும் உரையாற்றினர். கூட்டம் முடிந்த பின்னர் கலை நிகச்ழ்கிகளும்இடம்பெற்றன.

## சிறந்த ஆக்க இலக்கியங்களை மட்டு. கலாசார அவை வெளியிடும்

சிறந்த ஆக்க இலக்கியங்களை மட்டக்களப்பு கலாசார பேரவை பிரசுரித்து வெளியிடும்; இதற்கான உதவிகளை நொராட் அமைப்பு வழங்கும் என மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. இ. யோகநாதன் தெரிவித்தார்.

மட்டு. மாநகரசபை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை மட்டு. கலாசார பேரவையினால் நடாத்தப்பட்ட கலைவிழா, பட்டமளிப்புவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆர். தியாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு,யோகநாதன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்கென 400 மில்லியன் ரூபாவை நொராட் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. இதில் கலாசார பிரிவுக்கும் நிதியுதவி அளிப்பதாக நொராட் நிறுவனம் உறுதியளித்துள்ளதுஎன்றார்.

இவ் வைபவத்தில் தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். நாகலிங்கம் (அன்புமணி)வடக்கு கிழக்குமாகாண கலாசார பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (05)

## தமது யாழ் விஜயம் குறித்து அமைச்சர் தேவராஜ் விளக்கம்

பத்திரிகைகளில் குறிப்பிட்டபடி என்னுடைய யாழ் விஜயம் ரத்து செய்யப்படவில்லை. என்னுடைய விஜயத்திற்கு ஜனாதிபதி எவ்வித தடையும் விதிக்கவில்லை. திட்ட மிட்ட படி எமது அதிகாரிகள் குழு வட பகுதிக்கு சென்று வந்தது.

பத்திரிகையாளர்மாநாட்டின் போது கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் இந்து சமய கலாசார அமைச்சர் திரு. பி. பி, தேவராஜ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்குள்ள சைவ நிறுவனங்களின், மக்களின் ஆலயங்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு, எமக்கும் அவர்களுக்குமிடையில் உள்ள தொடர்பை வலுப்படுத்துவதே எமது விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கிருஸ்ணானந்தன் ஞாபகார்த்த கல்வி, சமூக செயற்திட்டங்கள்

அமரர் கிருஸ்ணானந்தன் ஞாபகார்த்தமாக கல்வி, மூசகம் தொடர்பான செயற்திட்டங்களை வகுத்து அமுல்படுத்தும் பொருட்டு அதுபற்றிய கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும். நிர்வாகக் குழு ஒன்றை அமைப்பதற்குமாக 6ம் திகதி ஞாயிறு பி. பகல் 4 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் பொதுக் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் கிருஸ்ணானந்தன் தொடர்பான தகவல்கள் அறிந்தவர்கள் அவரது ஆக்கங்களை வைத்திருப்போர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் போன்ற பலரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## கப்பல் சேவை ஆரம்பிக்க இலங்கை வற்புறுத்துகிறது

தலை மன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிக்குமாறு தற்போது இலங்கைத் தரப்பினால் இந்திய அரசு வற்புறுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக இந்தியா பரிசீலித்து வருவதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

சுமார் ஒருலட்சம் இந்திய பிரஜாஉரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு இப்படகு சேவை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து பாதுகாப்பு இணைபமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன வலியுறுத்தியுள்ளார்.

இதேசமயம் தலைமன்னார் ரயில் நிலையம் இறங்கு துறை என்பன இலங்கை அரசினால் திருத்தப்பட்டு தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது.

## ரயிலில் சுடப்பட்டவரின் சடலம் விமானம்மூலம் அனுப்பப்பட்டது

திங்கள் இரவு மிருசுவில் இரவு தபால் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருந்த வேளை சுட்டு கொல்லப் பட்ட ஜய திஸ்ஸ என்னும்கேகாலையினைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தருடைய சடலம் அவரது சொந்த ஊருக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியிலிருந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் கேகாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விடுமுறையின் நிமித்தம் இவர் ரயிலில் பிரயாணம் செய்த வேளையில் சுடப்பட்டுள்ளார். (11)

## பொலிஸ் நேர்முகப் பரீட்சை நாளையுடன் முடிவடைகிறது

தற்போது யாழ் பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்று வரும் பொலிஸ் நேர்முகப் பரீட்சை நாளைய தினத்துடன் முடிவடைகின்றது.

கடந்த20 ம்திகதிஇந்தநேர்முகப்பரீட்சைஆரம்பமாகியது இதில் பல ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டது தெரிந்ததே.

தெரிவு செய்யப் பட்டவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (03)

### பயிலுனர்

மூன்றுவருடங்களின் பின்னர் இப் பயிலுநர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து வெளியேறிய ஆசிரியர்கள் பெறும் சம்பளத்திட்டமே நடைமுறைப் படுத்தப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் மூன்று வருடங்களின் பின்னர் இவர்களுக்கு வழங்கப்படும்.

இதே வேளை இப்பயிற்சிக் காலத்தை இரண்டு வருடமாக குறைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருவதாக இலங்கை தமிழர் ஆசிரியர்சங்க செயலாளர் திரு. மகாசிவம் தெரிவித்தார்,

### வவனியா...

அங்குசென்றுள்ளனர் என பொலிஸ்வட்டாரங்கள்கூறின

வவுனியா- பொலிஸ் அத்தியட்சகரின் செயலகம்மன்னார் வீதியில் உள்ள அரச விருந்தினர்விடுதிக்குஅருகாமையில் இயங்க வைக்க முஸ்தீபுகள் இடம் பெறுகின்றது.

அதுவரை இச்செயலகம் வவுனியா நகர சபை கட்டிடத்தின் ஒரு பகுதியில் செயல்படும் என நம்பகரமான வட்டாரங்கள் கூறின (11)

## கண்டி, மட்டு, திருமலை பஸ்சேவை 2 தினங்களுக்குமுன் ஆசனப்பதிவு

கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு இடங்களுக்கான சாதாரண பஸ்சேவைகளுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆசனப் பதிவைமேற் கொள்ளலாம் என யாழ்பஸ் நிலைய வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

கொழும்பு, மட்டக்களப்பு இடங்களுக்கான விசேட பஸ் சேவைக்கு முதல் நாள் மட்டுமே ஆசனப்பதிவு மேற் கொள்ளப்படும். (03

## தியாகி சிவகுமாரன் பற்றிய தகவல்கள் சேகரிப்பு

உரும்பராய் தியாகி சிவகுமாரன் பற்றிய குறிப்புகள் வரலாற்று சான்றுகள் தகவல் வைத்துள்ளோர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

இவை வைத்துள்ளோர் கோண்டாவில் மக்கள் முன்னணி காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## அந்த அரச அலுவலகம் ஏன் அன்று மூடிக்கிடந்தது

மேதினத்திற்கு முதல் நாள் வவுனியாவில் உள்ள ஒருபிரபல அரச அலுவலகம் மூடப்பட்டுக் கிடந்தது. எவருமே அலுவலகத்திற்கு சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்பிரல் 30ம் திகதி திங்கட்கிழமை உயர் அதிகாரிகள், சிற்றூழியர் வரை எவருமே அன்று கடமைக்கு வரவில்லை காவலாளி மட்டும் சேவையிலிருந்ததைக் காணமுடிந்தது. அன்று அங்கு சென்ற மக்கள் ''கட்டிட''த்தை மட்டுமே திணைக்களத்தில் கண்டுதிரும்பினர் (11)

## கடை உடைக்க முயன்றோர் கையும் களவுமாக பிடிபட்டனர்

கடை உடைக்க முற்பட்ட இருவர் கையும் மெய்யுமாக வவுனியா நகர இரவு வேளை பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் அகப்பட்டனர்.

வவுனியா மீன் சந்தைக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்றினை உடைக்கமுற்பட்ட வேளையில் அகப்பட்டனர்.

விசாரணைக்காக இவ்விருவரும் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## நெடுஞ்சாலை திருத்தவந்த 9கோடி மகாணசபை பயன்படுத்தவில்லை

1990 ஆம் ஆண்டில் 15ஆயிரம் கிலோ மீட்டர் நெடுஞ் சாலைகளை பராமரிப்பதாகவும், திருத்த வேலைகளுக்காகவும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட 9 கோடி ரூபா இதுவரை பயன்படுத்தப்படவில்லை என தெரியவத்துள்ளது.

எனவேஇது தொடர்பான வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு மாகாண சபைகள் கேட்கப்பட்டுள்ளன இவ் வேலைகளுக்காக கனரக வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் 800 க்கு பேற்பட்ட சகல தரத்திலான ஊழியர்களும் அனுப்பிவைக்கபபட்ட பின்னரும் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது

## மட்டு. கலாசார பேரவையினால் தமிழறிஞர் மூவருக்கு பட்டமளிப்பு

மட்டக்களப்பு மாவட்ட கலாச்சார பேரவையினால் கடந்த திங்கட்கிழமை மட்[ மாநகர மண்டபத்தில் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் இலங்கையின் முதுபெரும் தமிழ் அறிஞர்கள் மூவர் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர்.

பிரபல கல்விமான் கே.கணபதிப்பிள்ளை (எப்.ஆர்.ஜி.எஸ்) அவர்களுக்கு தத்துவசிரோன்மணிப்பட்டமும், வித்துவான் பண்டிதர் வி. சி. கந்தையா (பி.எல்.ஓ) அவர்களுக்கு மகாவித்துவான் பட்டமும் பண்டிதை காங்கேஸ்வரி கந்தையா அவர்களுக்கு இலக்கியமணிப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (05)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 03-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது